
# ஜவ்வாது மலையில் சிறுதானிய உற்பத்தியை முன்னேற்ற கடைபிடிக்க வேண்டிய உத்திகள்




DHAN Foundation

Foreign Affairs, Trade and Development Canada

IDRC | CRDI

International Development Research Centre

Centre de recherches pour le développement international

# 1. விதைப்பிற்கு முன்னும், பின்னும் பலுக்கை அடித்தல்

**பயன்கள்**


- *மண் கட்டிகளை உடைப்பதுடன் மண்ணை புழுதியாக்குகிறது*
- *விதைகள் சீராக முளைக்க வழிவகுக்கிறது*
- *இரும்பு பலுக்கை கொண்டு பயிரடிப்பதற்கு ஏதுவாக இருக்கும்.*





*ஏற்கனவே ஓட்டிய உழவிற்கு எதிர்திசையில் பலுக்கை ஓட்ட வேண்டும்*






## ௨. மாற்று இரகங்களை பயிரிடுதல்


### சாமை இரகங்கள்



| பெருங்கொலை | கொளுத்தனா | கோ - 4 |
|---|---|---|
| பெரிய மணிகளைக் கொண்டது | அதிக மகசூல் தரும் | அதிக தாளை கொடுக்கும் |





### கேழ்வரகு இரகங்கள்



| ஜீ.பி.யு. 28 | கெம்பு |
|---|---|
| அதிக மகசூல் தரும் | சுவை மிக்கது |

# 3. நமது வயலில் அதிக மகசூலுக்கு தரமான விதையை தேர்ந்தெடுத்தல்

## நமது வயலில் விதை தேர்வு செய்தல்



வயலில் நல்ல பயிர் வளர்ச்சி உள்ள பகுதியை தேர்வு செய்க




பின் நாம் விரும்பும் இரக அடையாளமுள்ள சிறந்த கதிர்களை தேர்வு செய்து அறுவடை செய்க




தனியாக அடித்து தூற்றவும்






# சல்லடை கொண்டு சலித்தல்



1

முதலில் பெரியதுளை கொண்ட சல்லடையை பயன்படுத்தி பெரிய கல், குச்சி மற்றும் மண்ணை நீக்குதல் வேண்டும்.

அடுத்து சிறிய துளை கொண்ட சல்லடையை பயன்படுத்த வேண்டும். இதில் பெரிய தானியங்கள் மேலே தங்கிவிடும். அவற்றை விதைக்காக பயன்படுத்தவும். சாவி / பதர் மற்றும் சிறிய தானியங்கள் கீழே விழுந்துவிடும்.





2

பெரிய தானியங்கள்


சாவி / பதர் மற்றும் கல்

## 4. பயிர் எண்ணிக்கையை பராமரித்தல்

### சரியான விதையளவு பயன்படுத்துதல்




தரமற்ற விதைகளை அதிக அளவு பயன்படுத்துவதை தவிர்க்கவும்





சலிப்பதன் மூலம் பெற்ற தரமான விதைகளை சரியான அளவில் விதைக்கவும்


எப்போதாவது இம்முறையில் முயற்சி செய்திருக்கிறீர்களா ?

### பயிர் ஓட்டுதல் / பயிர் களைத்தல்




விதைத்த 25-30 நாட்களுக்குள் ஏற்கனவே ஓட்டிய உழவுக்கு எதிர்திசையில் பயிர் ஓட்டுதல் வேண்டும். அப்படியும் பயிர் எண்ணிக்கை அதிகமிருந்தால் மூலைக்கு மூலை பயிர் ஓட்டுதல் வேண்டும்.


2
3
4


3
4
5

# 5. ஊட்டச்சத்து மேலாண்மை

## ஜீவாமிர்தம் மேலுரமாக இடுதல்




ஒரு ஏக்கருக்கு தேவையான மேற்கூறப்பட்ட பொருட்களை பிளாஸ்டிக் டிரம் / தொட்டியில் இட்டு தண்ணீர் ஊற்றி கலக்கிவிட வேண்டும். இரண்டு நாட்கள் நிழலில் வைத்து மூன்று வேளையும் குச்சியால் கலக்கிவிட வேண்டும்.

- ஜீவாமிர்தம் தயாரித்து இரண்டு நாட்களுக்கு பின்னர் 7 நாட்கள் வரை பயன்படுத்தலாம்
- பயிர் வளர்ச்சி நிலைக்கு ஏற்றவாறு (10 லிருந்து 20 மடங்கு) நீர்சேர்த்து அடர்த்தியைக் குறைத்து பயன்படுத்தவும்
- மாதம் ஒரு முறை ஜீவாமிர்தம் தெளிக்க வேண்டும்
- எல்லா வகை பயிர்களுக்கும் தெளிக்கலாம்.

ஜீவாமிர்தம் நன்மை செய்யும் நுண்ணுயிர்கள் மற்றும் மண்புழுக்களை பெருக்குவதன் மூலம் மண்ணிலிருந்து பயிருக்கு கிடைக்கும் ஊட்டச்சத்தை அதிகரிக்கச் செய்கிறது. ஆகவே பயிர்கள் நன்கு செழுமையாக வளரும்.




# கனஜீவாமிர்தத்தை அடி உரமாக இடவும்

இவை திடநிலையில் தயார் செய்யப்படுகிறது. ஜீவாமிர்தம் தயாரிக்க தேவையான பொருட்களே போதுமானது தண்ணீருக்கு பதிலாக 100 கிலோ மாட்டுச் சாணம் சேர்க்க வேண்டும்.




1

கலவையின் மீது சாக்கு பை போட்டு மூடவும்



2

ஒரு நாளைக்கு **3** முறை என **3** நாட்களுக்கு தண்ணீர் தெளிக்க வேண்டும்



3

இரண்டு நாட்கள் நிழலில் உலர வைக்கவும்




4


கனஜீவாமிர்தத்தை **6** மாதங்கள் வரை பயன்படுத்தலாம். கனஜீவாமிர்தம் மாலை **6** மணி அளவில் வயலில் இடப்பட வேண்டும். அது இரவில் பெய்யும் பனி பொழிவினால் மண்ணில் நன்கு பரவி விடும். மாலையில் இடுவதின் மூலம் கன ஜீவாமிர்தத்திலுள்ள நுண்ணுயிர்கள் சூரியனின் வெப்பத்தினால் பாதிக்கப்படுவதை தவிர்க்கலாம்



5

# 6. ஊடுபயிராக துவரையை பயிரிடவும்



# 7. புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தல்

## சிறந்த கலப்பை வகைகள்


1



ஊத்தங்கரை கலப்பை ரூ.1400




திருப்பத்தூர் கலப்பை ரூ.700




2

இவை நிலத்தை ஆழமாக குறைந்தநேரத்தில் உழவு செய்வதுடன் களைகளை வேருடன் பிடுங்கி அகற்றுகிறது




3

மரக்கலப்பை போல் இவை சீக்கிரம் உடைவதில்லை. உடைந்தாலும் இவற்றை சரி செய்வது சுலபம்

# வரிசை விதைப்பு கருவி



1



2

3

இக்கருவியை கொண்டு விதைத்தால் பயிர் சீராக முளைப்பதுடன் சீரிய வளர்ச்சியுடன் இருக்கும்

களை எடுக்கும் நேரத்தை மிச்சப்படுத்துகிறது



4

# சைக்கிள் களை எடுக்கும் கருவி



5

அல்லது




5

# சாமை அறுவடை இயந்திரம்




பருவ மழையும், அறுவடையும் ஒரே சமயத்தில் வருவதால் நிலத்திலேயே அதிக தானியம் வீணாகுகிறது. தானியத்தின் தரம் குறைகிறது




பிரச்சனைக்குத் தீர்வாக சாமை அறுவடை இயந்திரம் பயன்படுத்தலாம். நேரமும் பணமும் மிச்சப்படுத்தலாம்

- நிலம் சமமாகவும் கற்கள் இன்றியும் இருக்க வேண்டும்.
- பயிரின் உயரம் குறைந்தது 2 அடி இருக்க வேண்டும்.
- நிலம் ஈரமாக இருக்கக் கூடாது.



# அவரை / துவரை விதைகளுக்கு செம்மண் பூசி பாதுகாத்தல்


- அவரை / துவரை விதையை தண்ணீரில் 2 நிமிடம் ஊறவைக்க வேண்டும்
- புற்றுமண் / செம்மண் உடன் நீரை கலந்து செம்மண் கலவையை உண்டாக்க வேண்டும்.




- அவரை / துவரை விதையை செம்மண் கலவையுடன் சேர்த்து நன்றாக பிசையவும். அனைத்து விதைகளின் மீதும் செம்மண் நன்கு ஒட்டியிருக்க வேண்டும்.




- ஈரப்பதம் போகும் அளவிற்கு 2-3 நாட்கள் வெயிலில் காய வைக்க வேண்டும்




**பயன்கள்**

- செம்மண் கட்டுவதால் பருப்பு நன்றாக உடையும்
- செம்மண் கட்டிய துவரையில் சுவையும், ஊட்டச்சத்தும் அதிகமாக இருக்கும்
- பூச்சி மற்றும் புஞ்சையின் தாக்குதலில் இருந்து பாதுகாக்கிறது
- செம்மண் கட்டிய துவரை பருப்பு ஒரு வருடம் வரை சேமித்து வைக்கலாம்



# சூப்பர் தானிய பை




தானியங்களை சேமித்து வைப்பதற்கு முன் நன்றாக ஈரப்பதம் போகும் அளவிற்கு காய வைக்க வேண்டும். இந்த பைகள் வெவ்வேறு அளவுகளில் பி.சி.ஐ நிறுவனத்தில் கிடைக்கிறது

**பயன்கள்**

- இதில் சேமித்து வைக்கும் தானியங்கள் பூச்சி மற்றும் பூஞ்சை தாக்குதல் இல்லாமல் இருக்கும்
- தானியம், விதையின் தரம் பாதுகாக்கப்படுகிறது
- பையில் ஓட்டை ஏற்படாமல் பாதுகாத்தால் மீண்டும் பயன்படுத்தலாம்

# வீட்டுத் தோட்டம்

- பல வகையான ஆண்டு மற்றும் பல வருட வயதுள்ள காய்கறி மற்றும் மருத்துவ பயிர்களை வளர்க்கவும்.
- பாரம்பரிய இரகங்களை பயன்படுத்தவும். இதற்கு சுவை அதிகம் அதே நேரத்தில் குறைந்த கவனிப்பே போதுமானது.








- இவற்றை சம உயர பாத்தி அமைத்து பயிரிடவும்
- வீட்டின் கழிவு நீரை பயன்படுத்தவும்


- பூச்சிகளைக் கட்டுபடுத்த சாம்பலை பயன்படுத்தலாம்
- அடுத்த வருடத்திற்கு தேவையான விதையை சேமித்து கொள்ளவும்







வீட்டுத் தோட்டத்தின் மூலம் என் குடும்பத்திற்கு தேவையான நச்சுத்தன்மையில்லா சத்துமிக்க காய்கறிகள் விதவிதமாக கிடைக்கின்றன. நாங்கள் தேவையான ஊட்டச்சத்துகளை எளிதாக பெற்றுக் கொள்கிறோம். நீங்கள் ?




## ஊட்டச்சத்தினை உறுதிபடுத்தும் சிறுதானியங்கள் மறுமலர்ச்சித் திட்டம், தெற்கு ஆசியா

இந்த செயல் ஆராய்ச்சி திட்டமானது சிறுதானியங்களின் உற்பத்தியைப் பெருக்கி, அவை உணவாக உட்கொள்ளப்படுவதை அதிகரித்து, ஊட்டச்சத்து குறைபாடுகளைக் குறைக்கும் நோக்கங்களுடன், இந்தியா, நேபாளம் மற்றும் இலங்கை நாடுகளில் 2011லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் சிறுதானியங்களின் உற்பத்தி, அறுவடைபின் சார்ந்த பணிகள், உணவாக உட்கொள்ளுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றிலுள்ள பிரச்சனைகளைக் கண்டறிந்து தீர்வு காண முயன்று வருகிறது. தானம் அறக்கட்டளையானது இத்திட்டத்தை இந்தியாவில் நான்கு மாநிலங்களில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், வாசன், அகில இந்திய சிறுதானியங்கள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் கனடாவைச் சேர்ந்த மென்னோனைட் பல்கலைக் கழகத்துடன் இணைந்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கு கனடாவைச் சேர்ந்த ஐ.டீ.ஆர்.சி மற்றும் டி.எப்.ஏ.டி.டி நிறுவனங்கள் நிதியுதவி புரிகின்றன.

## மானாவாரி விவசாய மேம்பாட்டுத் திட்டத்தை பற்றி

தானம் அறக்கட்டளையின் ஒரு திட்டமான மானாவாரி விவசாய மேம்பாட்டுத் திட்டம், "உணவு, வருவாய் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புள்ள, சிறு மானாவாரி விவசாயிகளுக்கான வலிமையான சமுதாயத்தைக் கட்டமைத்தல்" என்ற நோக்கத்துடன், 2002 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் நில மேம்பாடு, கால்நடை மேம்பாடு, பயிர் உற்பத்தி பெருக்கம், மண்வள மேம்பாடு, இடர் நிர்வாகம், மானாவாரி விவசாயத்திற்கான நுண்கடன்கள் வழங்குவது போன்ற செயல்பாடுகள் மூலம் மானாவாரி விவசாயிகளின் வாழ்வை மேம்படுத்தி வருகிறது. தற்பொழுது இந்தியாவில் 6 மாநிலங்களில் 14 பகுதிகளில் 17,654 ஏழை மானாவாரி விவசாயிகளுடன் பணிபுரிந்து வரும் இத்திட்டமானது, மேலும் பல்லாயிரக்கணக்கானவரை மேம்படுத்தும் இலக்குடன் செயல்பட்டு வருகின்றது.

மத்திய அலுவலகம்
**தானம் அறக்கட்டளை**
1ஏ, வைத்தியநாதபுரம் கிழக்கு, கென்னட் குறுக்குத் தெரு
மதுரை 625 016. தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி: +91 452 2302500 / 529 தொலைநகல்: 2602247
மின்னஞ்சல்: dhanfoundation@dhan.org இணையதளம்: http://www.dhan.org

தொடர்புக்கு

திருமதி. ச. நதியா, வட்டார ஆராய்ச்சியாளர்
**ஊட்டச்சத்தினை உறுதிப்படுத்தும் சிறுதானியங்கள் மறுமலர்ச்சித் திட்டம், தெற்கு ஆசியா & மானாவாரி விவசாய மேம்பாட்டுத் திட்டம்**
**தானம் அறக்கட்டளை**
பள்ளித் தெரு, இந்தியன் வங்கி பின்புறம், ஜமுனாமரத்தூர், ஜவாதுமலை,
திருவண்ணாமலை மாவட்டம் 635 703, தமிழ்நாடு, இந்தியா
கைபேசி: +91 76391 27439
மின்னஞ்சல்: rfdpjhills@dhan.org